திரு. கரு. சீமைச்சாமி : வேளாண்மைத் துறையை சீரமைக்கவேண்டும் என்று பரிந்துரைத்த மதிப்பீட்டுக் கமிட்டியின் சீரமைப்பு யோசனைகளில் ஏதாவது இப்பொழுது அமுல் நடத்தப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே இயக்குநர் அதற்கு ஒரு திட்டம் வரையறுத்து அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது. பரிசீலனை செய்துவிட்ட பிறகு, ஏற்றுக்கொள்ளக் கூடிய திட்டமாக இருந்தால் எவைஎவையை ஏற்றுக்கொள்வது, எவைஎவையை நீக்கிவிடுவது, எந்த வகையில், என்று பரிசீலித்த பிறகுதான் ஏற்றுக்கொள்ளப் படும்.

திரு. இல. பலராமன் : சீரமைப்பு பற்றி என்ன செய்யப்போகிறோம் என்று அரசு ஆணையிடுவதற்கு முன்னால், அதனுடைய நகலை மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்க முற்படுவார்களா? டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பதை மாற்றி அதே படிப்பு படித்தவரை நியமிப்பது பற்றி ஏதாகிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இயக்குநர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத்தான் இருப்பார். அதை மாற்றுவது குறித்து இப்பொழுது எந்த விதமான பரிசீலனையும் இல்லை. இவைகளையெல்லாம் பற்றி முடிவு எடுத்ததற்குப் பின்னால் தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதைப்பற்றி அறிவிக்க முடியுமே தவிர, இன்னும் அரசாங்கமே அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை இல்லை, அவைகளெல்லாம் பரிசீலனையில் தான் இருக்கிறது என்று நான் சொன்னேன்.

Arrests of Naxalites in Thanjavur district

*449 Q.—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any persons were arrested in Thanjavur district (Nannilam) during May 1969 for canvassing membership for Naxalite Communists; and

(b) if so, action taken against them?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தக் கேள்வி போட்டு கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது. நக்ஸலைட்ஸ் நடமாட்டம் இப்பொழுது நாடு பூராவும் பரவி வருகிறது. நேற்று கூட தென் ஆற்காடு மாவட்டத்தில் அவர்களுடைய நடவடிக்கை இருந்திருக்கிறது. சவ்வாது மலை, கோவை, மதுரையில் கம்பம் பகுதி, ஆகிய இடங்களில் இவர்களுடைய நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. இவர்களைக் கண்காணிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் தனிப் போலீஸ் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் பல முறை இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை வருகிற நேரத்தில் அதற்காக தனிக் கவனம் செலுத்துவதற்காக காவல் இலாகாவின் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் தயங்காது.

திரு. என். எஸ். வி. சித்தன் : நக்ஸலைட் கம்யூனிஸ்டுகள் எத்தனை பேர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள் ? சென்னையைச் சேர்ந்த ஒரு பிரபல வழக்கறிஞர் அரசாங்கத்தினால் தேடப்பட்டு தலைமறைவாக இருக்கிறாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எத்தனை பேர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள் என்கின்ற விவரம் எதுவும் இல்லை. சென்னையைச் சேர்ந்த வக்கீலைப் பற்றிச் சொல்கிறார்கள். அதைப்பற்றிய விவரங்களும் இன்றைய தகவல்களில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதைப்பற்றி விவரங்கள் தரலாம்.

திரு. சி. கோவிந்தராஜன்: வன்முறை நடவடிக்கைகளில் இறங்குபவர் எந்தக் கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தனி நபர்களாக இருந்தாலும் சரி, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு. ஆனால் மார்க்ஸிஸ்டு லெனினிஸ்டு என்று அமைத்திருக்கக்கூடிய நக்ஸலைட் கம்யூனிஸ்டு கட்சி தமிழ் நாட்டிலும் சரி, இந்தியா பூராவிலும் சரி, தடை செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியில்லை என்று சொன்னால், அவர்களுக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அனுமதி உண்டா, இல்லையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தடை செய்யப்படாத காரணத்தினால் அவர்கள் வன்முறைச் செயலில் ஈடுபடுவது அனுமதிக்கப்படவேண்டும் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், இது தடை செய்யப்படவேண்டிய ஒன்று என்பதை அரசு உணர்கிறது. மத்திய அரசு அதற்கான நடவடிக்கையை விரைவிலே மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, நக்ஸலைட் என்ற பெயரால் மட்டும் அல்ல. இன்னும் தஞ்சாவூர் ஜில்லாவில் மட்டுமல்ல, மற்றும் ஒரு சில கிராமங்களில் கூட வைக்கோல் போருக்கு தீ வைத்தல், கொள்ளையிடல் போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, இதுபற்றியெல்லாம் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்து, கிராமப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கும், காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கவும், தக்கபடி கண்காணிக்கவும் அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதை நக்ஸலைட்ஸும் செய்வார்கள். இப்படிச் செய்பவர்களை நக்ஸலைட்ஸ் என்றும் சொல்வார்கள். எப்படி என்றால், ரௌடிகள் என்று நாம் அழைக்கிறோம். அதைப்போல ரௌடிகள் செய்யும் காரியங்களைச் செய்பவர்களும் ரௌடிகள் பட்டியலில் வருகிறார்கள். அதைப் போலவே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்பவர்கள் நக்ஸலைட்ஸ் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், தஞ்சை மாவட்டத்தில் 44 பேர்களைக் கொலை செய்துவிட்டு, அவர்களுக்குச் சாதகமாக வக்காலத்து வாங்கி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நக்ஸலைட்ஸைப் பற்றியது. அதைப் பற்றி கேள்வி கேளுங்கள். வேறு எந்த நிகழ்ச்சியைப்பற்றியும் இங்கே இப்பொழுது கேட்கவேண்டாம்.

[1970 மார்ச் 20

திரு. வி. கே. கோதண்டராமன் : அதைப்போன்ற காரியங்களில் ஈடு பட்டிருப்பவர்களை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தனி நபர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வக்காலத்து வாங்கி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தஞ்சையில் வெண் மணியில் நடைபெற்ற சம்பவம் பற்றி உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை உண்டோ அதையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், நக்ஸலைட்களுக்காக இங்கே கேள்வி கேட்கப்படுகிற நேரத்தில் அவர்களுக்குச் சாதகமான முறையில் இங்கே கேள்வி அமைவது கூட நாம் வருந்துகிற ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், இந்த மன்றத்தில் அனைவரும் சேர்ந்து நக்ஸலைட்களை எதிர்க்கவேண்டும், அவர் களுடைய நடவடிக்கைகளை எதிர்த்தாகவேண்டும் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விசாரணை ஆணைக்குழுக்கள்

* 450 வினா---திரு. என். எஸ். வி. சித்தன் :

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967 மார்ச் திங்கள் முதல் அரசு அமைத்துள்ள விசாரணை ஆணைக் குழுக்கள் எத்தனை ?

(இ) எப்பாங்குகளைக் கொண்டும், எக்காரணங்களுக்காகவும் இந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன ?

(உ) எத்தனை ஆணைக்குழுக்கள் தங்கள் பணியை முடித்து அதற்கான அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளன ? அவற்றில் எத்தனை அறிக்கைகள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) எட்டு.

(இ) பின்வரும் நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரணை நடத்தி (மத்தியச்சட்டம் 60/1952) 1952-ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 3-வது பிரிவின்படி விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன :—

(1) கோயம்புத்தூர் மாவட்டத்தில் வேட்டைக்காரன் புதூர் நிகழ்ச்சி.

(2) நீலகிரி மாவட்டத்தில் அரவங்காடு காவலர் துப்பாக்கிச் சூடு

(3) சென்னையில் பேருந்து ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடந்த மோதல்.

(4) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடையார்பாளையத்தில் நடைபெற்ற காவலர் துப்பாக்கிச் சூடு.

(5) கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் பண்ணைத் தொழிலாளர் சிக்கல்.

(6) சேலத்தில் பேருந்து விபத்து.

(7) கோயம்புத்தூரில் பேருந்து விபத்து.